பொருளாதார ரீதியாகவும் தமிழ்நாட்டை

வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்கிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

தினகரன் நாளேடு தலையங்கம்!

சென்னை, ஆக 30-

தமிழ்நாட்டை பொருளாதார ரீதியாகவும் வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்கிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின் என்று தினகரன் நாளேடு தலையங்கம் தீட்டியுள்ளது

திமுக என்கிற மாபெரும் இயக்கத்தின் தலைவராக பொறுப்பேற்று, வெற்றிகரமாக 6 ஆண்டுகளை நேற்று பூர்த்தி செய்துள்ளார் முதல்வர் மு.க.ஸ்டாலின். 7ம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் முதல்வர் மு.க.ஸ்டாலினின் அரசியல் பயணம் அவ்வளவு எளிதானதல்ல. 1953, மார்ச் 1ல் பிறந்த அவர், பள்ளி பருவத்திலேயே அரசியலில் தீவிர ஆர்வம் கொண்டிருந்தார். அந்த ஆர்வத்தில் 1968 ஆம் ஆண்டு அவர் தொடங்கியதுதான் கோபாலபுரம் இளைஞர் திமுக. இதன் எழுச்சியை கண்ட அப்போதைய திமுக தலைவர் கலைஞர், 1980 ஆம் ஆண்டு மதுரையில் நடந்த பிரமாண்ட மாநாட்டில் திமுக இளைஞரணியை தொடங்கி வைத்தார்.

1982ல் இளைஞரணியின் மாநில அமைப்பாளராக மு.க.ஸ்டாலின் நியமிக்கப்பட்டார். பின் தனது விவேகமான செயல்பாடுகளில் 1984ல் இளைஞரணி செயலாளரானார். தனது அரசியல் பயணத்தின் அடுத்தக்கட்டமாக 1984ல் ஆயிரம் விளக்கு சட்டமன்ற தொகுதியில் போட்டியிட்டார். அந்த தேர்தலில் அவர் வெற்றி பெறவில்லை. அதனால் மனம் தளராமல் கட்சிப்பணியில் தேனீயாக செயல்பட்ட அவர், அதே தொகுதியில் 1989 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் வெற்றி பெற்று முதன்முதலாக தமிழக சட்டப்பேரவைக்குள் அடியெடுத்து வைத்தார்.

தமிழகத்தில் 1996 ஆம் ஆண்டு நடந்த உள்ளாட்சி தேர்தலில் சென்னை மாநகர மேயராக பதவி ஏற்றார். இவரது காலத்தில்தான் சென்னையானது சிங்கார சென்னையாக ஜொலித்தது. தொடர்ந்து 2006 ஆம் ஆண்டு திமுக ஆட்சிக்காலத்தில் உள்ளாட்சித்துறை அமைச்சராக மு.க.ஸ்டாலின் நியமிக்கப்பட்டார். அமைச்சராக இவரது நிர்வாகத்திறன், சுறுசுறுப்பான செயல்பாடுகள் அனைவரையும் கவர்ந்தது. இதனையடுத்து 2009 ஆம் ஆண்டு துணை முதல்வராக பொறுப்பேற்றார். 2015ல் தமிழகமெங்கும் நமக்கு நாமே சுற்றுப்பயணம் மேற்கொண்டு திமுகவை மேலும் வலுவாக்கினார். மக்களின் குறைகளை நகரங்கள், கிராமங்களுக்கு சென்று கேட்டது, மாணவ, மாணவிகளுடனான கலந்துரையாடல் போன்றவை மக்களிடையே பாராட்டை பெற்றது.

திமுகவில் துணை பொதுச் செயலாளர், பொருளாளர் என பதவி வகித்த அவர், கலைஞர் உடல் நலம் பாதிக்கப்பட்டபோது செயல் தலைவராக பொறுப்பேற்றார். 2018, ஆக. 7ஆம் தேதி கலைஞர் காலமான பின்னர், ஆக. 28 ஆம் தேதி திமுகவின் தலைவராக பொறுப்பேற்றார். 2019 ஆம் ஆண்டு எம்பி தேர்தல் வந்தது. அந்த தேர்தலில் தேனி தொகுதி நீங்கலாக அனைத்து தொகுதிகளையும் திமுக மற்றும் கூட்டணி கட்சிகள் கைப்பற்றின. இதனைத்தொடர்ந்து நடந்த 2021 சட்டமன்ற தேர்தலில் திமுக அமோக வெற்றி பெற்று மீண்டும் ஆட்சியை பிடித்தது. இடையில் நடந்த உள்ளாட்சி தேர்தல்கள், 2024 எம்.பி. தேர்தல் என திமுகவை அடுத்தடுத்து வெற்றிகரமான கட்சியாக வழி நடத்திச் செல்கிறார் மு.க.ஸ்டாலின். கட்சி தொண்டர்கள், கூட்டணி கட்சி தலைவர்களையும் தாயுள்ளத்தோடும் அரவணைத்தும் செல்கிறார்.

திமுக தலைவராக மட்டுமா? மாநில முதல்வராக விடியல் மகளிர் கட்டணமில்லா பேருந்து திட்டம், மகளிர் உரிமைத்தொகை, புதுமைப்பெண் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டம், காலை உணவுத்திட்டம், இல்லம் தேடி மருத்துவம் என எண்ணற்ற அற்புத திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். மேலும், ஆட்சிக்கு வந்த 3 ஆண்டுகளில் 31 லட்சம் பேருக்கு வேலை, ரூ.10 லட்சம் கோடி முதலீடுகள் என பொருளாதாரரீதியாகவும் மாநிலத்தை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்கிறார். மாணவர் பருவத்தில் துவங்கிய அரசியல் வாழ்க்கையானது, தற்போது ஒரு பேரியக்கத்தின் தலைவராகவும், மாநிலத்தின் தலைசிறந்த முதல்வராகவும் மு.க.ஸ்டாலினை முன்னிறுத்தியுள்ளது என்பது மிகையல்ல.

இவ்வாறு தினகரன் தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தினகரன்

ஆகஸ்ட் 29, 2024 வியாழக்கிழமை

ஏழும்... எழுச்சிப்பாதையும்

திமுக என்கிற மாபெரும் இயக்கத்தின் தலைவராக பொறுப்பேற்று, வெற்றிகரமாக 6 ஆண்டுகளை நேற்று பூர்த்தி செய்துள்ளார் முதல்வர் மு.க.ஸ்டாலின். 7ம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் முதல்வர் மு.க.ஸ்டாலினின் அரசியல் பயணம் அவ்வளவு எளிதானதல்ல.

1953, மார்ச் 1ல் பிறந்த அவர், பள்ளி பருவத்திலேயே அரசியலில் தீவிர ஆர்வம் கொண்டிருந்தார். அந்த ஆர்வத்தில் 1968ம் ஆண்டு அவர் தொடங்கியதுதான் கோபாலபுரம் இளைஞர் திமுக. இதன் எழுச்சியை கண்ட அப்போதைய திமுக தலைவர் கலைஞர், 1980ம் ஆண்டு மதுரையில் நடந்த பிரமாண்ட மாநாட்டில் திமுக இளைஞரணியை தொடங்கி வைத்தார்.

1982ல் இளைஞரணியின் மாநில அமைப்பாளராக மு.க.ஸ்டாலின் நியமிக்கப்பட்டார். பின் தனது விவேகமான செயல்பாடுகளில் 1984ல் இளைஞரணி செயலாளரானார். தனது அரசியல் பயணத்தின் அடுத்தக்கட்டமாக 1984ல் ஆயிரம் விளக்கு சட்டமன்ற தொகுதியில் போட்டியிட்டார். அந்த தேர்தலில் அவர் வெற்றி பெறவில்லை. அதனால் மனம் தளராமல் கட்சிப்பணியில் தேனீயாக செயல்பட்ட அவர், அதே தொகுதியில் 1989 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் வெற்றி பெற்று முதன்முதலாக தமிழக சட்டப்பேரவைக்குள் அடியெடுத்து வைத்தார்.

தமிழகத்தில் 1996 ஆம் ஆண்டு நடந்த உள்ளாட்சி தேர்தலில் சென்னை மாநகர மேயராக பதவி ஏற்றார். இவரது காலத்தில்தான் சென்னையானது சிங்கார சென்னையாக ஜொலித்தது. தொடர்ந்து 2006 ஆம் ஆண்டு திமுக ஆட்சிக்காலத்தில் உள்

திருவள்ளூர் மத்திய மாவட்டம் திருநின்றவூர் நகர திமுக சார்பில் பொது உறுப்பினர் கூட்டம் நகரக் கழக செயலாளர் தி.வை.இரவி ஏற்பாட்டில் நடைபெற்றது இக்கூட்டத்தில் முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ பல்வேறு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினார். உடன் இந் நிகழ்ச்சியில் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாநில மாவட்ட நிர்வாகிகள் சி.ஜெரால்டு, ம.இராஜி, பா.நரேஷ்குமார், உஷா ராணி ரவி, த.எத்திராஜ், ஜி.விமல்வர்ஷன், ஜெ.அன்பழகன், எஸ்.கமலக்கண்ணன், தெ.நாகராஜ், பேபி, ரவி, பாபு, குணசேகரன், சரளா நாகராஜ் உள்பட பலர் உள்ளனர்.

மாவட்டச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் பங்கேற்பு!

சைதை மேற்குப் பகுதியில் வட்ட வாரியாக ஆலோசனைக் கூட்டம்!

பகுதிச் செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி. அறிவிப்பு!

சென்னை, ஆக. 30-

சென்னை தெற்கு மாவட்டம் - சைதை மேற்கு பகுதி தி.மு.க வட்டங்களின் பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் பங்கேற்று ஆலோசனை வழங்குகிறார் என பகுதிக்கழக செயலாளர் எம். கிருஷ்ணமூர்த்தி அறிவித்துள்ளார்.

அவரது அறிவிப்பு வருமாறு:-

சென்னை தெற்கு மாவட்டம் சைதை மேற்கு பகுதி தி.மு.க. வட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டங்கள் நடத்திட தலைமை கழக அறிவிப்புக்கிணங்க.... சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் படி சைதை மேற்கில் அடங்கிய 139-139(அ) 140-140(அ) 142-142(அ) ஆறு வட்டங்களில் வட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற உள்ளது இக்கூட்டத்தில் சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருமான மா.சுப்பிரமணியன், தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சிதங்கபாண்டியன் மற்றும் மாவட்ட கழகத்தால் அறிவிக்கப்பட்ட மாவட்ட பொருளாளர் திருமதி வாசுகி பாண்டியன் ஆகியோரும் பங்கேற்க உள்ளனர்.

இக்கூட்டம் கீழ்க்கண்ட தேதிகளில் குறிப்பிட்டுள்ள இடங்களில் நடைபெற உள்ளது.

நாள் / நேரம் இடம் தலைமை

142 வட்டம் - 31.08.2024 சனிக்கிழமை மாலை 5 மணி - பி.எஸ்.டி. திருமண மண்டபம், கொத்தவால்ச்சாவடி தெரு, சைதை - எம்.நாகா வட்டச் செயலாளர்

139 அ வட்டம் - 31.08.2024 சனிக்கிழமை மாலை 6 மணி - 21/24, வள்ளுவர் தெரு, ஜாபர்கான் பேட்டை, த. சேகர் இல்லம் - சை.மு.சேகர் வட்டச் செயலாளர் 140 அ வட்டம் - 01.09.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி - அண்ணாமலையார் திருமண மண்டபம், மேற்கு மாம்பலம் - ந.தமிழரசு வட்டச் செயலாளர்

140 வட்டம் - 01.09.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணி- நாகரத்தினம்மாள் திருமண மண்டபம், மேற்கு மாம்பலம் - எம்.ஸ்ரீதரன் வட்டச் செயலாளர்

139 வட்டம் - 01.09.2024 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணி- கலைஞர் பவளவிழா திருமண மண்டபம், வடிவேல் தெரு, ஜாபர்கான் பேட்டை - அட்கோ கமலநாதன் வட்டச் செயலாளர்

142 அ வட்டம் - 01.09.2024 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணி - ஸ்ரீ விஜயராகவலு திருமண மண்டபம், பெருமாள் கோயில் தெரு, சைதை - எஸ்.பி.கோதண்டம் வட்டச் செயலாளர்

மேற்கண்ட பொது உறுப்பினர்கள் கூட்டங்களில் தலைமைச் செயற்குழு உறுப்பினர், பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள்,

மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள், பகுதி அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக முகவர்கள், ஒருங்கிணைப்பாளர்கள் கழக முன்னோடிகள், கழக ஆதரவாளர்கள்,

கழக அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் உள்ளிட்ட அனைத்து கழக தோழர்கள் அனைவரும் குறிப்பிட்ட நேரத்தில் தவறாமல் கலந்து கொண்டு இக்கூட்டத்தினை சிறப்பித்திடுமாறு சைதை மேற்கு பகுதி செயலாளரும், பத்தாவது மண்டலக்குழுத் தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அமெரிக்கப் பயணம் மேற்கொண்டுள்ள

முதல்வர் மு.க.ஸ்டாலின் முதலீடுகளை ஈர்க்க வாழ்த்துகள்!

கனரக வாகன ஓட்டுனர் நலக்கூட்டமைப்பு தலைவர் ப.மா.முத்துக்குமார் அறிக்கை!

சென்னை,ஆக.30-

இந்தியன் கனரக வாகன ஓட்டுனர்கள் நலக் கூட்டமைப்பு தேசிய கௌரவ தலைவர் மதுரை ப. மா. முத்துக்குமார் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அமெரிக்க பயணத்திற்கு வாழ்த்து தெரிவித்து அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

இந்தியன் கனரக வாகன ஓட்டுனர்கள் நலக் கூட்டமைப்பு கடந்த ஆண்டு தமிழக முதல்வர் சர்வதேச முதலிட்டார் மாநாடு நடத்திய போது வாழ்த்துக்களையும் ஆதரவையும் தெரிவித்தோம். மேலும் தமிழக முதல்வரின் அனைத்து முயற்சிகளும் வெற்றியடைய எங்களின் ஆதரவையும் வாழ்த்துக்களையும் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தொடர்ந்து இந்தியன் கனரக வாகன ஓட்டுனர்கள் நல கூட்டமைப்பு வழங்கி வருகிறது. அதே போல் தற்போது தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அமெரிக்க பயணம் தமிழ்நாட்டிற்கு முதலீடுகளை ஈர்ப்பதில் வெற்றி பெற இந்தியன் கனரக வாகன ஓட்டுனர்கள் நலக் கூட்டமைப்பு சார்பாக வாழ்த்துகின்றேன்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அமெரிக்க பயணம் தமிழகத்தின் பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் வர்த்தகத்தையும் தொழில் வளர்ச்சியையும் மென் மேலும் மேம்படுத்தும் இந்த முதலீடு ஈர்ப்பு பயணம் தமிழகத்திற்கு பல் வேறுப்பட்ட வேலை வாய்ப்புகளை உருவாக்குதல், சரக்கு மற்றும் சாலைப் போக்குவரத்து வர்த்தகத்தை மேம்படுத்துதல் , அனைத்து தரப்பு உள்ளடக்கிய வளர்ச்சி, ஒருங்கிணைந்த சம வாய்ப்புக்கான சமூக நீதியை ஏற்படுத்தும் என்பதை உறுதியாக நம்புகிறோம்.

தமிழக தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா அவர்களின் பெரும் பங்களிப்பு தமிழ்நாடு தொழில் வளர்ச்சியில் ஒரு புதிய அத்தியாயத்தை படைக்க வேண்டுமென்று இத்தருணத்தில் அமைச்சர் அவர்களையும் வாழ்த்துகிறோம்.

2024 ஆம் ஆண்டு நடைபெற்ற மூன்றாவது (GIM) ஜனவரி 2024. உலகளாவிய முதலீட்டாளர் மாநாட்டின் போது. 6.64 லட்சம் கோடி ரூபாய் முதலீட்டு புரிந்துணர்வு உறுதிமொழிகளில் 60% முதலீட்டை உறுதி செய்ததற்காக தமிழ்நாடு தொழில்துறை அமைச்சர் மற்றும் அதன் அமைச்சக அதிகாரிகளின் முயற்சிகளை இந்தியன் கனரக வாகன ஓட்டுனர்கள் நலக் கூட்டமைப்பு பாராட்டுகிறது.

முதலமைச்சரின் இந்தப் பயணம் கடல் கடந்த பயணம், இதுவரை தமிழகத்தில் காலூன்றாத அமெரிக்க நிறுவனங்களின் புதிய முதலீடுகளாக ஈர்க்கும் வகையில் இருக்கும்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை இந்தியன் கனரக வாகன ஓட்டுனர்கள் நலக் கூட்டமைப்பு முழு மனதுடன் ஆதரவு அளித்து முதல்வர் அமெரிக்க பயணம் வெற்றிகரமாக அமைய மனதார வாழ்த்துகிறேன்.

வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில்

கதிர்ஆனந்த் எம்.பி.வாக்காளர்களுக்கு இன்று நன்றி தெரிவிக்கிறார்!

மதச்சார்பற்ற முற்போக்கு இந்தியா கூட்டணியின் சார்பில் போட்டியிட்டு வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில் வெற்றி பெற்றுள்ள டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. இன்று காலை கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரலின்படி வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்க உள்ளார்.

ஆம்பூர் சட்டமன்ற தொகுதி
குடியாத்தம் கிழக்கு ஒன்றியம்

வ. எண	நேரம்	கலந்து கொள்ளும் ஊராட்சிகள்
1	காலை 8.30 மணி	சின்னசேரி
2	காலை 8.45 மணி	அகரம்சேரி
3	காலை 9.00 மணி	கூத்தம்பாக்கம்
4	காலை 9.15 மணி	கொல்லமங்கலம்
5	காலை 9.30 மணி	பள்ளிகுப்பம்

அணைக்கட்டு மத்திய ஒன்றியம்

6	காலை 9.45 மணி	அஹ்ராஹரம்
7	காலை 10.00 மணி	தோளப்பள்ளி
8	காலை 10.15 மணி	அகரம்

அணைகட்டு மேற்கு ஒன்றியம்

9	காலை 10.30 மணி	குருவராஜபாளையம்
10	காலை 11.00 மணி	வேப்பங்குப்பம்
11	காலை 11.15 மணி	குப்பம்பட்டு

வ. எண	நேரம்	கலந்து கொள்ளும் ஊராட்சிகள்
12	காலை 11.30 மணி	இராமநாயினிகுப்பம்
13	காலை 11.45 மணி	அரிமலை
14	காலை 12.00 மணி	குப்பம்பாளையம்
15	பகல் 12.15 மணி	சின்னபள்ளிகுப்பம்
16	பகல் 12.30 மணி	பாக்கம்பாளையம்
17	பகல் 12.45 மணி	மேல்பள்ளிப்பட்டு
18	பகல் 1..00 மணி	ஆசனாம்பட்டு

காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. – பாலவாக்கம் மு.மனோகரன் பங்கேற்பு:

மதுரவாயல் 148வது வட்டக் கூட்டம்! அமைச்சர் மா.சுப்பிரமணியன் சிறப்புரை!

வட்டச் செயலாளர் மேட்டுக்குப்பம் எஸ்.ரமேஷ்ராஜ் அறிக்கை!

சென்னை, ஆக.30

மதுரவாயல் தெற்கு பகுதி 148வது வட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம் நாளை (31.08.2024) காலை 10.00 மணியளவில் நடைபெறுகின்றது என்று வட்டக் கழகச் செயலாளர் மேட்டுக்குப்பம் எஸ்.ரமேஷ்ராஜ் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

சென்னை தெற்கு மாவட்டம் மதுரவாயல் தெற்கு பகுதி 148-வது வட்டத்தில் மாவட்ட கழக செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சருமான மா. சுப்ரமணியன் அறிவுறுத்தலின் படி வட்ட அவைத் தலைவர் லயன் டி.தயாளன் தலைமையில் வட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம் மேட்டுக்குப்பம் என்.டி.பட்டேல் சாலையில் உள்ள கோல்டன் பேலஸ் பின்புறம் நாளை (31.08.24) காலை 10.00 மணியளவில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சருமான மா.சுப்பிரமணியன், மதுரவாயல் தெற்கு பகுதி செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான காரம்பாக்கம் க. கணபதி, மதுரவாயல் தொகுதி வட்ட பொது உறுப்பினர்கள் கூட்ட ஒருங்கிணைப்பாளரும், மாவட்ட கழக துணை செயலாளருமான பாலவாக்கம் மு.மனோகரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

மேலும் இந்நிகழ்ச்சியில் முன்னாள் போரூர் பேரூராட்சி தலைவர் எஸ்.அருணாச்சலம், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் இராமபுரம் வ.செல்வகுமார் எம்.சி. , மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் இராமாபுரம் அ.விஜயபாலா, மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் இராமாபுரம் வி.ராஜேஷ், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ச. சங்கர்கணேஷ் எம்.சி., இராமாபுரம் செ.ரவி மற்றும் தெற்கு பகுதி கழக நிர்வாகிகள் அவைத்தலைவர் எஸ்.செல்வராஜ், பகுதி துணைச் செயலாளர்கள் வே. மதியழகன், பி.பால்பாண்டி யன், அ. பாரதி எம்சி, பொருளாளர் கே.ராஜி எம்.சி. மற்றும் மாவட்ட பிரதிநிதிகள் சு. இரவி, எஸ்.திருநாவுக்கரசு, அமைப்பு சாரா ஓட்டுனர் அணி பகுதி அமைப்பாளர் சி.இராஜேந்திரன், வட்ட கழக நிர்வாகிகள் ஆர். அசோக்குமார், திராவிட மா.கதிரவன், பி.சசிகலா, ஆர். தனக்கோடி, பகுதி பிரதி நிதிகள் செ.கல்யாணசுந்தரம், எம்.எஸ்.இராமசந்திரன்,

ஜெ.மதன்ராஜ், வி.பாலமுருகன், இரா.வடிவேல், மு. மாவட்ட பிரதிநிதி அரசி ராஜேந்திரன், ஏ.பி.நாகராஜ், கே.பி.மனோகரன், பி.பாபு, எம்.எஸ்.தியாகராஜன், கே.அருணை ரமேஷ், ஜி.சந்துரு, டி.விஜயன், பி.கிருஷ்ணன், கே.தெய்வமணி, எம். முபாரக், என்.சரவணன், இரா.ஏழமலை, இரா.ஆறுமுகம், எ.அய்யபன், ஆர். ரமேஷ், வி.பிரேம், பி.உதயன், பி.கே.நேரு, எம்.முத்துசாமி, பி.அருண்குமார், என். பூமாலை, கே.குப்பன், வி.அம்பல வாணன் மற்றும் இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி மற்றும் கழகத்தின் இந்நாள், முன்னாள் நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்

இந்நிகழ்ச்சியில் இறுதியாக இளைஞர் அணி ஆர். தியாகராஜன் நன்றியுரை ஆற்றுகிறார்.

இவ்வாறு மேட்டுக்குப்பம் எஸ்.ரமேஷ் ராஜ் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கலைஞரின் வழியில் திராவிட மாடல் அரசு நடத்தும் முதல்வருக்கு வருகிற

சட்டமன்றத் தேர்தலில் 200 இடங்களுக்குமேல் வென்றிட உழைப்போம்!

வேலூர் மாவட்ட தொலைத் தொடர்பு துறை எஸ்.சி., எஸ்.டி. சம்மேளன முன்னாள் செயலாளர் பொன்.சேகரன் அறிக்கை!

வேலூர், ஆக. 30-

வேலூர் மாவட்ட தொலைத் தொடர்பு துறை எஸ்.சி., எஸ்.டி., சம்மேளன முன்னாள் செயலாளர் பொன்.சேகரன் விடுத்துள்ள அறிக்கையில், முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் திராவிட மாடல் அரசை நடத்தும் முதல்வருக்கு வருகிற 2026 சட்டமன்றத் தேர்தலில் 200க்கும் மேற்பட்ட இடங்களில் வெற்றிகளைப் பெற உறுதுணையாக உழைப்போம் எனத் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

முன்னாள் முதலமைச்சர், இலக்கிய சோலை திரையுலக முத்திரை, தனிநலங்கருதா பொதுநலம், சீர்திருத்த செம்மல், போன்ற எண்ணற்ற கொள்கைகாரர், முத்தமிழ றிஞர் கலைஞர் அய்யா அவர்களை நாகரீக மற்ற முறையில் கைது செய்ததை கண்டித்து அகில இந்திய அஞ்சல் மற்றும் தொலை தொடர்பு துறை SC/ST சம்மேளன . வேலூர் வேலூர் மாவட்ட செயலாளர் பொன்.சேகரன் மற்றும் அங்கத்தினர்கள் அனைவரும் சேர்ந்து 'We strongly condemn the uncultured arrest of former Chief Minister Thiru. Kalaizar Karunanidi. Pray Intervene. P.Segaran District Secretary, Members of Telecom SC/ST federation Vellore" என்று சென்ற 30.06.2001ம் நாள் குடியரசு தலைவர், பிரதம மந்திரி, ஒன்றிய உள் துறை அமைச்சர் ஆகியோருக்கு, கோடான கோடி தொண்டர்களில் கடைசி தொண்டனாக இருந்து அனுப்பிய தந்தியின் "உண்மை நகல்" 'Certified True Copy' இது எனக்கு கிடைத்த பொக்கிஷமாக பாதுகாத்து வருகிறேன்.

மேற்கூறிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கேவலமான கைது நடவடிக்கை தொடர்பாக நடந்த நீதிமன்ற விசாரணையில், விசாரணை நடத்திய அவரது பெயர் நீதியரசர் அசோக்குமார் என நினைக்கின்றேன். (இவர் சென்னை உயர்நீதிமன்ற நீதியரசராக பதவி ஏற்கும் முன் கோவையில் Labour court Judge ஆக பதவி வகித்தவர்) நீதியரசர் அவர்கள் "முதலமைச்சராக பதவி வகித்தவர் அவரை நடுவீதியில் உட்கார வைத்திருப்பதுதான் அவருக்கு கொடுக்கும் மரியாதையா? இது போன்றுதான் நடத்துவீர்களா? என்று வழக்கில் ஆஜரான அரசு வழக்கறிஞர், மற்றும் காவல்துறை அதிகாரியினரை பார்த்து நீதியரசர் அவர்கள் எழுப்பிய கேள்வி, கைது செய்ய ஆணையிட்ட அராஜக நெஞ்சில் பாய்ந்த மிக, மிக கூர்மையான ஈட்டிமுனை வார்த்தைகள்" என்று அன்றைய கைது நடவடிக்கையின் வேதனையில ஒரு சிறு ஆறுதல் அடைந்தேன்.

தற்போது 2024ம் ஆண்டு நடந்த நாடாளுமன்ற தேர்தலில் திராவிட மாடல் ஆட்சியின் தளகர்த்தா, திக்கெட்டும் திராவிட மாடல் ஆட்சியின் கொடிபறக்க உறக்கமின்றி உழைத்து வரும் தலைவர் எத்தனை புது, புது ஆட்சிகள்

தோன்றினாலும், தமிழ் நாட்டு மக்களை திராவிட மாடல் ஆட்சியிலிருந்து திசை திருப்ப முடியாமல் 40க்கு 40 என்ற வெற்றியை தமிழ்நாட்டு மக்கள் பலநேரங்களில் நிரூபித்தது போல் வருகின்ற 2026ல் நடக்கும் மாநில தேர்தலிலும் 200க்கும் குறையாத வெற்றியை தமிழ்நாட்டின் முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் பொற்கரங்களில் ஒப்படைத்து, அகில இந்திய அளவிலும் INDIA கூட்டணியில் 400க்கும் குறையாமல் வெற்றி பெற்று நமது இந்தியாவின் ஜனநாயத்தையும் காப்பாற்றி கலைஞரின் நினைவிடத்தில் சமர்ப்பிக்க உறுதி ஏற்போம்.

இவ்வாறு வேலூர் பொன்.சேகரன் தெரிவித்துள்ளார்.